**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),**

**நந்தனம், சென்னை– 600 035. தொலைபேசி எண். 044-29515590**

**ஆணை நாள் 11.06.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள். NC 15454/E/2023**

திரு.சொ.குமார் .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ .. பொது அதிகார அமைப்பு
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
சோழிங்கநல்லூர் வட்டம், சென்னை

******

**ஆணை**

1) இவ்வழக்கு குறித்த ஆவணங்களை இன்று (10.06.2026) பரிசீலித்த ஆணையம் இவ்வாணையத்தின் 10.09.2025 நாளிட்ட உத்தரவை இவ்வழக்கின் பொதுத் தகவல் அலுவலர்/சோழிங்கநல்லூர் வட்ட தலைமையிடத்து துணை வட்டாட்சியர் இன்று வரையில் (11.06.2026) நிறைவேற்றவில்லை என்பதை இவ்வாணையம் கண்டனத்துடன் பதிவு செய்கிறது

2) இவ்வாணையத்தின் **10.09.2025 நாளிட்ட உத்தரவு பத்தி 5(ii)-ன்படி**, மேல்முறையீட்டாளருக்கு குறித்துரைத்த காலக்கெடுவிற்குள் தகவல் வழங்காத அன்றைய சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் அலுவலக முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்களிடமிருந்து எழுத்துமூலமான விளக்கத்தை பெற்று சமர்ப்பிக்காத **தென்சென்னை வருவாய் கோட்டாட்சியருக்கு இவ்வாணையம் தனது கண்டனத்தை** பதிவு செய்கிறது. ஆகவே, இவ்வாணையத்தின் **19.06.2025 நாளிட்ட உத்தரவு பத்தி 5(ii)-ன்படி**, மேல்முறையீட்டாளருக்கு குறித்துரைத்த காலக்கெடுவிற்குள் தகவல் வழங்காத அன்றைய சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் அலுவலக முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்களிடமிருந்து எழுத்துமூலமான விளக்கத்தை பெற்று **இவ்வாணையத்தில் 27.07.2026 அன்று தென்சென்னை வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்/பொதுத் தகவல் அலுவலர் மூலம் நேரில் சமர்ப்பிக்குமாறு தென்சென்னை வருவாய் கோட்டாட்சியருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.**

3) இவ்வாணையத்தின் **10.09.2025 நாளிட்ட உத்தரவு பத்தி 5(iii)-ன்படி, மேல்முறையீட்டாளருக்கு நஷ்டஈடாக ரூ.3,000/- வழங்கி** அதனை மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டது குறித்த அறிக்கையை **இவ்வாணையத்தில் 27.07.2026 அன்று நேரில் ஆஜராகி தவறாமல் சமர்ப்பிக்குமாறு சோழிங்கநல்லூர் வட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.**

4) இவ்வாணையத்தின் **10.09.2025 தேதியிட்ட உத்தரவினை நிறைவேற்றத் தவறிய காரணத்தால் அன்றைய விசாரணையில் பங்கேற்ற பொதுத் தகவல் அலுவலர்** மீது தகவல் அறியும் உரிமை சட்டம் 2005 பிரிவு 20(1)-ன் கீழ் ரூ.25,000/- அதிகபட்ச அபராதம் ஏன் விதிக்கலாகாது என்பதற்கான விளக்கத்தையும் மற்றும் சட்டப்பிரிவு 20(2)-ன் கீழ் அவர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள அவரது உயரதிகாரிக்கு ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்து மூலமான விளக்கத்தையும் அவரிடமிருந்து பெற்று **இவ்வாணையத்தில் 27.07.2026 அன்று நேரில் ஆஜராகி தவறாமல் சமர்ப்பிக்குமாறு சோழிங்கநல்லூர் வட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.**

6) மேற்குறித்த உத்தரவுகளை நிறைவேற்ற தவறும்பட்சத்தில், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவுகளின் கீழான நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என்று **தென்சென்னை வருவாய் கோட்டாட்சியர் மற்றும் சோழிங்கநல்லூர் வட்டாட்சியர்/ மேல்முறையீட்டு அலுவலருக்கு** இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்கள். NC 15454/E/2023**

பெறுநர்

வருவாய் கோட்டாட்சியர்,
தென்சென்னை கோட்டம்,
வருவாய் கோட்ட அலுவலகம்,
கிண்டி, சென்னை-32.

பொதுத் தகவல் அலுவலர்/வருவாய் கோட்டாட்சியரின்
நேர்முக உதவியாளர், தென்சென்னை கோட்டம்,
வருவாய் கோட்ட அலுவலகம்,
கிண்டி, சென்னை-32.

மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்.
சோழிங்கநல்லூர் வட்டம்,
சென்னை மாவட்டம்,

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம். சோழிங்கநல்லூர் வட்டம், (10.09.2025 தேதியில்)
சென்னை மாவட்டம்
(மேல்முறையீட்டு அலுவலர்/வட்டாட்சியர் சோழிங்கநல்லூர் மூலமாக)

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்.
சோழிங்கநல்லூர் வட்டம், சென்னை மாவட்டம்

திரு சொ.குமார்,
5 வேம்புலி பண்ணைக்காரன் தெரு,
உள்ளகரம், சென்னை.91.

Copy to File
CR/PA